(முற்பகல் 10-00)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் அனுமதியுடன் வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

திரு. எம். சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மூன்று சக்கரங்களைக் கொண்ட மினி டாக்சிகள் மற்ற டாக்சிகளை விட போவதற்கு எளிதாக இருக்கின்றது. அதே நேரத்தில் கட்டணமும் குறைவு. இதைக் கருத்திற்கொண்டு இந்த டாக்சிகளின் எண்ணிக்கையை அதிகரிக்க அரசு முயற்சிக்குமா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, இதை இயக்குபவர்கள் முன்வந்தால் அரசு பரிசீலிக்கும்.

வெளிநாட்டிற்கு ஏற்றுமதி செய்யப்படும் பனைப் பொருட்கள்.

*வினா எண். 257—திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: மாண்புமிகு கதர் மற்றும் பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பனை மரத்திலிருந்து உற்பத்தியாகும் பொருட்கள் வெளிநாட்டிற்கு அனுப்பப்படுவது உண்மையா ?

(ஆ) ஆம் என்றால் அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன்: (அ) ஆம்.

(ஆ) விவர அறிக்கை அவை முன் வைக்கப்பட்டுள்ளது.

திருமதி. ஏ. எஸ். பொன்னம்மாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே எங்கெங்கே இந்த பனைப் பொருள்கள் தயாரிக்கின்ற தொழிற்சாலைகள் இருக்கின்றன. இதனால் எத்தனை பேர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன்: மாண்புமிகுபேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பனைப் பொருள்கள் சம்பந்தமாக பனைத் தும்பு குளச்சலிலே தயாரிக்கப்பட்டு, தூத்துக்குடியிலிருந்து அது வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யக்கூடிய நிலை இருக்கிறது. பனைப் பொருள்களிலிருந்து கிடைக்கின்ற ஓலைப் பொருள்களும் மற்றப் பொருள்களும், மதுரையை மையமாகக் கொண்டு தமிழகம் முழுவதிலும் இருந்து தயாரிக்கப்படும் பொருள்கள் அனைத்தும், மதுரைக்கு வரவழைக்கப்பட்டு அங்கிருந்து வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது.

---

*244 ஆம் பக்கத்தில் இணைப்பாக அச்சிடப்பெற்றுள்ளது.

1983 பிப்ரவரி 12]

திருமதி. ஏ. எஸ். பொன்னம்மாள் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பொருள்களை வெளிநாடுகளுக்கு அனுப்பு வதன் மூலமாக அரசுக்கு எவ்வளவு லாபம் கிடைத்திருக்கிறது என்பதை அறிய இயலுமா ?

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் : தலைவர் அவர்களே, பனைப் பொருள்களைப் பொறுத்தமட்டில், வேறு எந்தப் பொருள்களையும் விட, இந்தப் பொருள்கள்தான் அதிக பட்சம் வெளிநாடுகளுக்கு அனுப்பப்படுகிறது. அதாவது 35 நாடுகளுக்கு அனுப்பப்படுகின்றது. கடந்த 3 ஆண்டுகளின் அனுப் பப்பட்ட விவரங்கள் அவையிலே வைக்கப்பட்டுள்ளது. 1981—82ல் 28.25 லட்சம், 1980—81-லே 27.50 லட்சம், 1979—80-லே 43.97 லட்சம் ஏற்றுமதி செய்யப்பட்டிருக்கிறது. பனை ஓலைப் பொருள்கள் பற்றி இந்த அவையிலே குறிப்பு வைக்கப்பட்டிருக் கிறது. பனை வெல்லப் பாகு—அதாவது ஜாகரி ஜூஸ் கருப் பட்டி பாகு அமெரிக்க நாட்டிற்கு 2.66 லட்சம் ரூபாய் அள வுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டிருக்கிறது. இங்கே லாபம் எவ் வளவு என்று குறிப்பிடப்படவில்லை. ஏற்றுமதி செய்யப்பட்ட தொகைதான் இங்கே குறிப்பிடப்பட்டிருக்கிறது.

திரு. ப. பொன்னுரங்கம் : தலைவர் அவர்களே, பனைப் பொருள் உற்பத்தி செய்யப்பட்டு, வெளி நாடுகளுக்கு—35 நாடு களுக்கு —ஏற்றுமதி செய்யப்படுவதாக அமைச்சர் அவர்கள் கூறினார்கள். ஆனால் இந்த மூன்றாண்டு பட்டியலைப் பார்க்கும் போது, வர வர 'டிக்ரீஸ்' ஆகிறதே ஒழிய, இன்கிரீஸ் ஆகவில்லை. அதாவது 79—80-லே 43.97 லட்சம், 1980—81-லே 27.50 லட்சம், 1981—82-லே 28.25 லட்சம். இப்படிக் குறைவதற்குக் காரணம் என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் : தலைவர் அவர்களே, இந்தக் குறைவுக்குக் காரணம் அங்கே சரியான முறையிலே தும்புகள் கிடைக்காததுதான். அது சரி செய்யப் பட்டு இந்த ஆண்டு 50 லட்சம் ஏற்றுமதி செய்வதற்கான ஆர்டர் கள் வந்திருக்கின்றன. ஆகவே இனிமேல் கூடுவதற்கான வாய்ப் புக்கள்தான் இருக்கின்றன.

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவர் அவர் களே, திருவள்ளுவர் திருக்குறளை பனை ஓலையில்தான் எழுதி னார். இந்த சட்டமன்ற நடவடிக்கைகள்கூட திருக்குறளைச் சொல்லித்தான் பேரவைத் தலைவர் அவர்கள் ஆரம்பிக்கிறார். ஆதலால், அந்தப் பனைத் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கும் வகையில் பரீட்சார்த்தமாக சட்ட மன்ற நடவடிக்கைக் குறிப்புகளை பனை ஓலைச் சுவடிகளில் எழுதி அளிக்கப்படுமா? அதே போன்ற அரசாங்க விழாக்களுக்கான அழைப்பிதழ்கள் பனை ஓலை சுவடியில் அடிக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருக்குறளைப் போன்று உறுப்பினர்கள் சுருக்கமாகச் சொன்னால் அனைத்தையும் செய்ய லாம்,

[1983 பிப்ரவரி 12

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் : தலைவர் அவர்களே, இந்தப் பனைத் தொழிலிலே ஈடுபட்டவர்களுக்கு வேலை வாய்ப்பு கொடுக்க வேண்டும் என்பதற்காகத்தான், வாரியம் சம்பந்தமாக நடைபெறுகிற அரசு நிகழ்ச்சிகளுக்கான அழைப்பிதழ்கள் ஓலைச் சுவடியில் அச்சிடப்பட்டு வினியோகிக்கப் படுகின்றன. திருக்குறளும் ஓலைச் சுவடியில் அடிக்கப்பட்டு விற்பனைக்கு வைக்கப்பட்டிருக்கிறது. ஓலைச் சுவடிகளிலே கலை நுட்பம் தெளிவாகத் தெரிவதற்கான வரைபடங்கள் வரைந்து அது அமோகமான வரவேற்பைப் பெற்றிருக்கிறது. தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பு கிட்டியிருக்கிறது. இங்கே சட்டமன்ற நிகழ்ச்சிகளை ஓலைச் சுவடிகளிலே கொடுப்பதைப் பற்றிய விவரங்கள் இல்லை. தனிக் கேள்வி போடவும்.

திரு. இரா. கருப்பையா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பழங்காலத்து ஓலைச் சுவடிகளைப் பற்றி நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் தாமரைக்கனி அவர்கள் நினைவு படுத்தினார்கள். ஓலைச் சுவடிகளில் சட்டமன்ற அழைப்பிதழ்கள் எல்லாம் வருமா, அதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா என்று கேட்டார்கள். சட்டமன்ற உறுப்பினர்கள் பழங்காலத்தை நினைவு படுத்தும் வகையில் பழங்கால உடைகளை அணிந்து சட்டமன்றத்திற்கு வருவதை அரசு அனுமதிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன். (பதில் இல்லை).

திரு. செ. சிவசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் வெளி நாடுகளுக்கு நுங்கு ஏற்றுமதி செய்யப்படும் என்று சொல்கிறார்கள். எந்த அளவுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது ? எவ்வளவு நாளைக்கு நுங்கு கெட்டுப் போகாமல் இருப்பதற்கு கண்டுபிடிக்கப்பட்டுள்ளது என்பதை தெரிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, நுங்கு விரைவில் கெட்டுப் போகாமல் இருப்பதற்கு ஆராய்ச்சி செய்து, அதற்கு 18 குளிர்சாதனங்களை உருவாக்கி அதை டின்களில் அடைத்தால் எத்தனை நாளைக்கு அவைகள் கெடாமல் இருக்கும் என்பதற்கு ஆராய்ச்சி செய்து அதில் வெற்றியும் பெற்றிருக்கிறார்கள். அரபு நாடுகளுக்கு பரீட்சார்த்தமாக அனுப்பப்பட்டிருக்கிறது. விரைவிலே அதற்கான ஆர்டர்கள் எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. டி. மணி : பேரவைத் தலைவர் அவர்களே, குளச்சலிலேயிருந்து வெளி நாடுகளுக்கு ஏற்றுமதியாகின்ற தும்பு, கடந்த 2 ஆண்டுகளுக்கு முன்னால் அங்கு ஏற்கெனவே உற்பத்தியாவதில் தடங்கல் ஏற்பட்டிருக்கிறது. அதற்குக் காரணம் என்ன ? உற்பத்தி செய்கின்ற அந்த வேலைகளில் ஈடுபட்டிருக்கின்ற அந்தத் தொழிலாளர்களுக்கு நேரடியாக இந்தத் துறையின் மூலமாக சம்பளங்கள் வழங்கப்படுகின்றதா ? அவர்களுக்கு

1983 பிப்ரவரி 12]

கொடுக்கின்ற சம்பளம் மிகக் குறைவானது என்பதை கணக்கிலெடுத்து நியாயமான குறைந்தபட்ச சம்பளச் சட்டம் கொண்டுவந்து அந்தத் தொழிலாளர்களுக்குக் கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதா? அதோடு அங்கே ஏராளமான தும்பு கிடைக்கின்ற காரணத்தால் அதை மேலும் அபிவிருத்தி செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, குளைச்சலிலே பணிபுரிகின்ற பணியாளர்களுக்கு நியாயமான சம்பளங்கள் வழங்கப்பட்டு வருகிறது. அங்கே நல்ல தும்பு கிடைக்கின்ற காரணத்தால் அதை அதிகப்பட்சமாக வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்கான முயற்சிகளை வாரியம் எடுத்து வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கெ. சொக்கலிங்கம் : பேரவைத் தலைவர் அவர்களே, கள் இறக்குவதிலே இன்றையதினம் அதிக கவனம் செலுத்துகிற காரணத்தால் பனைமரத்திலிருந்து பதநீரை இறக்குவது குறைந்துள்ளது என்பது அரசுக்குத் தெரியுமா ? இந்தப் பதநீர் மட்டுமல்ல, நுங்கு மட்டுமல்ல, பனை உற்பத்திப் பொருள்களான, பனைவெல்ல உற்பத்தியும் குறைவாக இருக்கிறது என்பது தெரியுமா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி வெளிநாட்டுக்கு எது எது அனுப்பப்படுவது பற்றியதாகும். கள்ளும், பதநீரும் நம் நாட்டிலேயே உபயோகப்படுவது.

பொதுப் பணித்துறையில் பணியாற்றும் பொறியாளர்கள்.

*வினா எண். 258—திரு. ப. நெடுமாறன் : மாண்புமிகு கதர் மற்றும் பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பொதுக் பணித் துறையைச் சேர்ந்த இஞ்சீனியர்களை வெளிநாடுகளுக்கு (deputation) அடிப்படையில் அனுப்புவதில்லை என அரசு முடிவெடுத்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் : (அ) மற்றும் (ஆ): அயல் நாட்டுப் பணிப் பட்டியலில் சேர்த்துக் கொள்ள மாநில அரசால் ஏற்கெனவே பரிந்துரைக்கப்பட்ட பொறியாளர்களையும், இப்பணிக்கு ஏற்கெனவே தேர்ந்தெடுக்கப்பட்ட பொறியாளர்களையும், மத்திய அரசு அழைப்பு அனுப்பும் நேரத்தில் விடுவிக்க அனுமதி வழங்கலாம் என்றும், இனிவரும் விண்ணப்பங்களைப்